# சு. வெங்கடேசனின் வேள்பாரி புதினத்தில் விழாக்கள்

**ம. இந்துஜா பிருந்தா,**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,(பதிவு எண்: 21111284022026),
தமிழ்த்துறை, தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி),
பாளையங்கோட்டை - 627 002.இ (இணைவு: மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி)

**முனைவர் தா. ஷமிலா ஜோஸ்டர்,**
நெறியாளர் மற்றும் உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை - 627 002.
இணைவு: மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி)

**முன்னுரை:**

விழை என்றால் விருப்பம் என்று பொருள்படுமாதலால், மகிழ்வை அடிப்படையாகக் கொண்டு மக்களால் விரும்பி நடத்தப்படுபவை விழாக்கள் எனப்பெயர் பெற்றிருக்க வேண்டும். நாகரிகத்தையும், பண்பாட்டையும் வெளிப்படுத்தும் இவ்விழாக்கள், பண்டைய காலம் முதலாகவே தமிழகத்தில் பல்வகை காரணங்களுக்காக கொண்டாடப்பட்டு வருகின்றன. இன்றைய காலகட்டத்தில் பிறந்தநாள், திருமணம், புதுமனை புகுதல், வளைகாப்பு, பூப்புனித நீராட்டு என மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் அனைத்தும் மக்களால் விழாக்களாக கொண்டாடப்படுகின்றன. குறிப்பாக கடவுளர்கள் உறையும் கோவில்களில் திருவிழாக்கள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. மகிழ்வை வெளிப்படுத்தும் தருணங்களிலும், வழிபாடுகளை முன்வைக்கும் தருணங்களிலும் என பல பொருண்மைகளில் விழாக்கள் நடத்தப்பெறுகின்றன. சு. வெங்கடேசனின், 'வீரயுக நாயகன் வேள்பாரி' புதினத்தில், முற்கூறப்பட்ட இரண்டு தருணங்களிலும் விழாக்கள் நடைபெற்றதாக சித்திரிக்கப்பட்டுள்ளன. இவற்றை ஆராய்ந்து விழாக்களுக்கான பொருண்மைகளை வெளிப்படுத்துவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**வேள்பாரி புதினத்தில் விழாக்களுக்கான சமூக பின்புலம்:**

ஆனந்த விகடன் இதழில், 2016-ஆம் ஆண்டு முதல், வார தொடராக வெளியிடப்பட்டு, 2018-ஆம் ஆண்டு புதின வடிவம் பெற்றது சு. வெங்கடேசன் எழுதிய 'வீரயுக நாயகன் வேள்பாரி' என்ற புதினமாகும். சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள வள்ளல் பாரியின் கதையமைப்பை தழுவி, பாரியை கதைத்தலைவனாகக் கொண்டு வேள்பாரி புதினம் எழுதப்பட்டுள்ளது. பாரியின் கொடைத்தன்மை, பாரி-கபிலர் நட்புத்திறம், பாரியை மூவேந்தர்கள் எதிர்த்தல், பறம்பு மலையின் வளம் என சங்க இலக்கியச் செய்திகளை அடித்தளமாகக் கொண்டு இப்புதினம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், சங்க இலக்கியக் குறிப்புகள் புதினத்தின் புனைவுகளாகவும், கதைப்பின்னலாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே இத்தரவுகளின் அடிப்படையில், வேள்பாரி புதினத்தை ஆராயும்போது, பாரியின் வாழ்விடம் குறிஞ்சித் திணையாகவும், மூவேந்தர்களின் வாழ்வியல் நிலவுடைமைச் சமுதாயத்தைப் பிரதிபலிப்பதாகவும் உள்ளன. அவ்வகையில் புதினத்தில் சிறப்பிக்கப்பட்டுள்ள விழாக்கள் என்பன மக்களின் நிலவியல் பண்பாடுகளை வெளிப்படுத்துவதாகவே உள்ளன.

**திருமணவிழா:**

சமூகத்தின் முன்னிலையில் ஆணும்-பெண்ணும், கணவன்-மனைவி என்னும் உறவுகளை ஏற்றுக்கொள்ளும் சடங்கு அல்லது செயல்முறையே திருமணமாகும். இது பொருளாதாரம், இனப்பெருக்கம், குடும்பம் என்ற காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுவதால் திருமணம் என்பது சமுதாய நிறுவனமாக போற்றப்படுகிறது. நாடு, இனம், மொழி என பல பாகுபாடுகளினால் திருமண முறைகளிலும் எண்ணற்ற நடைமுறைகள் உள்ளன. தமிழகத்தைப் பொறுத்த அளவில் திருமணம் என்பது பண்டைய காலம் முதலாகவே நடைபெற்றதற்கு தொல்காப்பியம் சான்றளிக்கிறது. தொல்காப்பிய பொருளதிகாரத்தில், திருமணமுறைகளும், திருமணம் தோன்றியதற்கான காரணமும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை,

**"கற்புஎனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே"[1]
"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"[2]**

என்ற நூற்பாக்கள் எடுத்துரைக்கின்றன.

வேள்பாரி புதினத்தில் மனம் ஒருமித்த பின்பு பெரியோர்களால் நடத்திவைக்கப்படும் திருமணமும், அரசியல் காரணத்திற்காக மட்டுமே நடத்தப்பெறும் திருமணமும் கூறப்பட்டுள்ளன.

**குறிஞ்சித் திணையில் திருமணவிழா:**

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சித் திணையாக கொள்ளப்படுகிறது. அவ்வகையில், வேள்பாரி புதினத்தில் பறம்பு மலை குறிஞ்சித் திணையாக அமைந்துள்ளது. இத்திணையில் நடைபெறும் திருமணம் என்பது புதினத்தில், ஆண் பெண் இருவரும் களவினை மேற்கொண்டு, பின்பு பெரியோர்களால் திருமணம் செய்துவைக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது. கபிலர் மூவேந்தர்களிடம் உரையாடும்போது, இச்செய்தி புதினத்தில் கூறப்பட்டுள்ளது. போர் பற்றிய பேச்சுவார்த்தைக்காக கபிலரிடம் உரையாடிய மூவேந்தர்கள், பாரியின் மகளிரை மூவேந்தர்களுக்கு மணமுடித்துக்கொடுத்தால் போர் நடைபெறுவதை தடுக்கமுடியும் என்று கூறுவர். அப்போது கபிலர் குறிஞ்சித்திணை வாழ்வியலில் மணம் என்பது இருவரது மனம் சம்பந்தப்பட்டது என்றும், அதனை மூவேந்தர்கள் அரசியலாக மாற்றத் துணிந்தனர் என்றும் எண்ணுவார். இந்நிகழ்வு திருமணவிழா என்பது குறிஞ்சித் திணையான பறம்பில் மரபுரீதியாகக் கொண்டிருக்கும் பண்பாட்டு பின்புலத்தை எடுத்துரைக்கிறது.

**"இயற்கையின் தன்னியல்பில் பற்றிப் படரும் கொடிபோல் மனிதக்காதல் செழித்துக்கிடக்கும் ஆதிநிலம் குறிஞ்சி. குறிஞ்சியின் குலச்சமூகம் நோக்கி மணவுறவை அரசியல் நடவடிக்கை என்னும் வல்லாயுதமாக மாற்றி வீசியெறிந்தபோது கபிலரின் உடல் நடுங்கியது."[3]**

என்ற வரிகள் கபிலரின் எண்ணவோட்டத்தையும், நிலவுடைமைச் சமுதாயத்தினர் திருமணத்தினை அரசிலாக மாற்ற முயல்வதையும் ஆசிரியர் கூறியுள்ளார்.

பறம்பின் திசைக்காவல் வீரனான நீலன் மற்றும் அவனது காதலி மயிலாவின் திருமணத்தை பெரியோர்கள் விழாவாக கொண்டாடிய நிகழ்வு புதினத்தில் திணைசார் மணத்திற்கு சான்றாக இடம்பெற்றுள்ளது. நீலன்-மயிலாவின் திருமணவிழாவிற்கு பறம்பெங்கும் இருக்கும் மக்கள் வருகைதரத் தொடங்கினர். ஆடல், பாடல், விருந்து, நகைச்சுவை, திருமண வேலைகள், சடங்குகள் என பல நிகழ்வுகளினூடாக விழா நடைபெற்றுக்கொண்டிருந்தது. நிறைவாக சடங்குமுறைகளோடு திருமணம் நடைபெற்று, குறிஞ்சித் திணையினரின் சூழலியல் உணர்வு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை,

**"மந்தையின் நடுவிலிருக்கும் செங்கடம்பு மரத்தினடிவாரத்தில் வந்துசேர்ந்தனர். ஊரின் நிலைமரம் அது. அதனடிவார மேடையில் நின்று மணமக்கள் மாலை சூடவேண்டும். மயிலம் மலர் மணக்கும் மாலையை அவர்கள் சூடிய பொழுது மலையெங்குமிருந்து பறிந்துவந்த பூக்களை அவர்களின் மீது பொழிந்தனர் மக்கள்"[4]**

என்ற பகுதி விளக்குகிறது.

வேள்பாரி புதினத்தில் கூறப்பட்டுள்ள குறிஞ்சித் திணை சார்ந்த திருமணவிழாக்களை குறிப்பிடும்போது, பாரி-ஆதினியின் மணவிழாவினை விவரிக்கவேண்டியது அவசியமானதாகும். பாரி பாணர்களின்வழி, ஆதினியைப் பற்றி அறிந்துகொண்டிருந்தான். ஆதினியும் பாரியின் வீரத்தையும், கொடைத்திறத்தையும் அறிந்துவைத்திருந்தாள். இருவரும் ஒருவரையொருவர் பார்க்கும்முன்பே காதல் கொண்டிருந்தனர். பின்பு சாணைக்கல் பெறுவதற்காக பாரி, ஆதினியின் தந்தையான மேழகனின் நாட்டிற்குச் சென்றிருந்தபோது, ஆதினி மயிற்கொன்றை மரத்திற்கு மாலையிட்டு, தனது விருப்பத்தை தெரிவித்தாள். அதன்பின்பு ஆதினி, பறம்பின் தலைவனான பாரி உணரத்தவறிய கடமைகளை எடுத்துரைத்தாள். இருவரின் எண்ணங்களும் ஒன்றிணைந்த நிலையில் இவர்களுக்கு பெரியோர்கள் திருமணம் செய்துவைத்தனர். இத்திருமணவிழா நடைபெற்ற பின்பு, ஆதினிக்கு வழங்கப்பட்ட சீர்கள் விழாவின் சிறப்பினை எடுத்துரைக்கின்றன.

**"பறம்பின் தலைவனுக்கு ஆதினி மணமுடித்து எவ்வியூருக்கு அழைத்து வந்தனர். கொண்டாட்டங்களும் கூத்துகளும்தான் எத்தனை வகை! விருந்துகளும் விளையாட்டுகளும்**

**முடிந்தபாடில்லை... ... ... பச்சிலை, தாதுக்கள், உலோகங்கள், உடற்கூறுகள் எனப் பலவற்றிலும் தேர்ந்த பதினெட்டு மருத்துவக்குடிகளை உடன் அனுப்பிவைத்தான் மேழகன்."[5]**

மேற்கண்ட பகுதியின்வழி, திருமணவிழாவில் நடைபெற்ற கூத்துகளும், கொண்டாட்டங்களும் விழாவின் தன்மையை வெளிப்படுத்துகின்றன.

சங்க இலக்கியத்தில் திருமணத்திற்கான பல்வேறு படிநிலைகள் பாடல்களில் குறிப்புகளாக இடம்பெற்றுள்ளன. வீட்டைப் புதுபித்தல், சிலம்புகழி நோன்பு, பரிசம் போடுதல், திருமண விழா என ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் கூறப்பட்டுள்ளன. குறிப்பாக பின்வரும் நல்லாவூர்கிழாரின் பாடல்,

**"வால் இழை மகளிர் நால்வர் கூடி,**
**'கற்பினின் வழாஅ, நற் பல உதவிப்**
**பெற்றோற் பெட்கும் பிணையை ஆக! என,**
**நீரொடு சொரிந்த ஈர் இதழ் அலரி**
**பல் இருங் கதுப்பின் நெல்லோடு தயங்க**
**வதுவை நல் மணம் கழிந்த பின்றை"[6]**

என்ற வரிகளில், சங்ககால திருமண முறைகளை விவரிக்கின்றன.

**அரசியல் திருமணம்:**

வேள்பாரி புதினத்தில் வணிகத் தலைவனின் மகள் பொற்சுவைக்கும், பாண்டிய இளவரசன் பொதியவெற்பனுக்கும் இடையே நடைபெற்ற திருமணம் அரசியலையும், அரசியலின் கட்டமைப்பிற்குக் காரணமான வணிகத்தையும் வளப்படுத்துவதற்காக மட்டுமே நடத்தப்பட்டதாகும். குறிஞ்சித் திணையில் நடைபெற்ற திருமணவிழா என்பது சூழலியலோடு தொடர்புபடுத்தப்பட்டு நடத்தப்பட்டது. ஆனால் பொற்சுவைக்கு நடைபெற்ற அரசியல் திருமணம் பன்மடங்கு விமரிசையாக, பலவகை சடங்குகளோடு நடத்தப்பெற்றது. எனினும் கணவன்-மனைவி என்னும் உறவிற்கு எவ்வித மதிப்பும் அளிக்காத வகையிலும், பொற்சுவை-பொதியவெற்பன் இருவரின் மனங்கள் ஒன்றிணையாத நிலையிலும் இத்திருமணம் நடத்தப்பட்டது. மேலும், வேள்பாரி புதினத்தில் அவலச்சுவையின் உச்சமாக பொற்சுவை என்ற பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. காதலனுடன் சேர இயலாமல், வெறும் அரசியல் காரணத்திற்காக மட்டுமே நடைபெறும் திருமணம் என பொற்சுவையின் வாழ்க்கை துன்பத்தின் இருப்பிடமாகவே புதினத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இவர்களின் திருமணம் மலரணியும் சடங்கு, சிலம்பு கழிதல் சடங்கு, திருமணவிழா என பல்வேறு கட்டங்களில் ஆடம்பரமாக நடைபெற்றது.

**"மணவிழா முடிந்து மூன்று வாரங்கள் ஆகியிருந்தன. தனது வாழ்வில் காணாத பெருவிழாவினைக் கண்டுமுடித்த மதுரை இயல்புநிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது."[7]**

என்ற வரிகள், மனதளவில் மணமகளுக்கு விருப்பமில்லாத திருமணமானாலும் அரசியல் திருமணமாக உருபெற்ற நிலையில் சிறப்புற நடைபெற்றதை வெளிப்படுத்துகின்றன.

வெவ்வேறு தேச அரசுகளிடையே அல்லது உள்நாட்டில் உள்ள இரண்டு அதிகாரப் பிரிவினருக்கிடையே கூட்டணிக்காக செய்யப்படும் தந்திர ரீதியிலான திருமணம் அரசியல் திருமணமாகும். சங்க இலக்கியத்தில் அரசியல் திருமணங்கள் நடைபெற்றதற்கான குறிப்புகள் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் தமிழகத்தில் அரசியல் திருமணம் என்று ஆராயும்போது, சோழர்கள் கீழைச் சாளுக்கியர்களுடன் கொண்டிருந்த மண உறவுகளைக் குறிப்பிடலாம். 'முதலாம் குலோத்துங்கச் சோழன், சாளுக்கிய அரசனுக்கும், இராஜேந்திர சோழனின் மகள் அம்மங்கா தேவிக்கும் பிறந்தவனாவான்'[8] என கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, தனது 'சோழர்கள்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளது இதற்குச் சான்றாகும்.

**நிறைசூல் விழா:**

'பெண் என்பவள் தாய் என்னும் நிலையை அடையும்போதுதான் முழுமையடைகிறாள்' என தாய்மையின் சிறப்பு போற்றப்படுகிறது. அவ்வாறே தாய்மையைப் போற்றி, புத்துயிரை வரவேற்கும் விழாவாக இன்றைய வாழ்வியலில் வளைகாப்பு விழா கொண்டாடப்படுகிறது. வேள்பாரி புதினத்தில் நிறைசூல் விழா என்ற பெயரில் இவ்விழா கொண்டாடப்பட்டுள்ளதாக நிகழ்வுகளின்வழி அறியமுடிகிறது. நீலனின் மனைவி மயிலா கருவுற்று நிறைமாதமாக இருக்கும்போது, அவளுக்கு நிறைசூல் விழா நடத்தவேண்டும் என பெரியவர்கள் முடிவுசெய்திருந்தனர். நிறைசூல் விழாவில், நீலனும்-மயிலாவும் மாலை மாற்றுதல் என்னும் சடங்கை நிகழ்த்த வேண்டும் என்றும், அதன்பின்பு

ஊர்பெண்கள் அனைவரும் மயிலாவை அழைத்துக்கொண்டு ஒரு சந்தனவேங்கை மரத்தை தேர்வுசெய்து அதனருகில்வைத்து சடங்கு நடத்துவர் என்றும் புதினத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்விழாவின்போது கணவனை தவிர்த்து வேறு எவ்வித ஆடவர்களுக்கும் இடமளிக்கப்படவில்லை. மேலும் சந்தனவேங்கை மரத்திற்கு அழைத்துச்செல்லும் இடத்திற்கும் ஆண்கள் செல்ல அனுமதி வழங்கப்படுவதில்லை என்ற விதிமுறைகள் நிறைசூல் விழா என்பது பெண்களுக்கே உரியது என்பதை எடுத்துரைக்கின்றன.

**“குனிந்திருந்த மயிலாவின் முகம் சற்றே நிமிர்ந்தது. மாதம் கழித்து வந்தவனின் கையைப் பற்றி நிறை வயிற்றில் வைத்து மகவை உணரச்செய்ய வேண்டும் எனத் தோன்றியது.”**[9]

**“நிறைசூல் பெண்ணின் மலர்ந்த முகத்துக்கு இணையான மலர் இதுவரை கண்டறியப்படவில்லை. நான் எந்தப் பூவைச் சூட்டுவேன்?’ அவன் சொல் கேட்டு ஆதினியின் கண்கள் கலங்கின.”**[10]

நிறைசூல் விழாவின்போது கருவுற்றிருக்கும் பெண்ணின் மனநிலையையும், அவளது கணவனின் அன்பையும் மேற்கண்ட பகுதிகள் எடுத்துரைக்கின்றன.

**கொற்றவை கூத்து:**

கொற்றவை என்பவள் பாலை நிலத்திற்குரிய பெண்தெய்வமாக அறியப்பட்டாலும், மலை மற்றும் காடு என்ற இரு நிலத் தெய்வமாக கருதப்பட்டதை சங்க இலக்கியக் குறிப்புகளின்வழி அறியமுடிகிறது. ஆனால் பெரும்பான்மையான இலக்கியங்களில் போர் தெய்வமாக கொற்றவை வழிபடப்படுவதை மறுக்க இயலாது. வேள்பாரி புதினத்தில் கொற்றவை கூத்து, நீராட்டு, குருதியாட்டு என போர் சூழல்களில் கொற்றவை வழிபடப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. இவற்றுள் கொற்றவை கூத்தும், குருதியாட்டு விழாவும் உக்கிரமேறிய சடங்குகளை உள்ளடக்கியதாகயிருப்பினும் விழாவாக கொண்டாடப்பட்டுள்ளதை புதினத்தின் நிகழ்வுகள் எடுத்துரைக்கின்றன.

மூவேந்தர்களால் அழிக்கப்பட்ட பல்வேறு குலங்களின் மிச்சங்கள் பறம்பு நாட்டில் அடைக்கலமாகி வாழ்வதாகவும், அவர்கள் நான்காண்டுக்கு ஒருமுறை ஒன்றுகூடி சூளுரைக்கும் விழாவாக கொற்றவை கூத்து நடைபெறுகிறதாகவும் கபிலரிடம் பாரி கூறுகிறான். பதினாறு குலங்களும் மூவேந்தர்களால் தங்களது குலங்கள் அழிக்கப்பட்ட வரலாற்றை, பாடல்வழி எடுத்துரைத்து, மூவேந்தர்களை பழிவாங்குவதாக சூளுரைப்பதாக கொற்றவை கூத்து நடைபெறும் என்றும் பாரி விவரிக்கிறான்.

> **“கபிலருக்குக் கொற்றவை விழாவைப் பற்றி எத்தனையோ கேள்விகள் இருந்தன. ஆனால், விழாநாள் நெருங்க நெருங்க, ஊரே பேச்சைக் குறைத்து மௌனமாகியது. கபிலரால் யாரிடமும் எளிதில் உரையாட முடியவில்லை.”**[11]

புதினத்தில் கொற்றவை கூத்து இறுக்கமான சூழலில், பதினாறு குலங்களின் வருத்தங்களின் வெளிப்பாடாகவும், இனக்குழுக்களின் பண்பாட்டு எச்சமாகவும் நடத்தப்படினும், இக்கூத்து விழாவாக ஏற்கப்பட்டதை மேற்கண்ட பகுதி எடுத்துரைக்கிறது.

**குருதியாட்டு விழா:**

போர் முடிவுற்ற சூழலில், போரின் இழப்புகளை மறக்கவும், போர் வெற்றியை கொண்டாடும் விதமாகவும் குருதியாட்டு விழா நடைபெறுவதாக வேள்பாரி புதினத்தில் கூறப்பட்டுள்ளது. போர் முடிவுறும் முன்பாகவே, சிறைப்பிடிக்கப்பட்ட நீலனிடம் பறம்பின் தரப்பிலிருந்து, வரும்முழுநிலவு நாளில் குருதியாட்டு விழா நடைபெறும் என்று மறைகுறிப்பு தெரிவிக்கப்பட்டது. அதன்படியே, போர் நிறைவுற்ற பின்பு, போரில் வீரமரணம் அடைந்த வீரர்களை நினைவுக்கூறும் சடங்குகள் நடத்தப்பட்டன. இரவாதன், தேக்கன், பொற்சுவை, பழையன், திசைவேழர் என போர்ச்சூழலில் உயிர்நீத்தவர்களுக்கு மரியாதைகளும், வழிபாடுகளும், வழிபடுவதற்கான சின்னங்களும் உருவாக்கப்பட்டன. போர் தொடங்குவதற்கு முன்பாக கொற்றவையிடம் முறையிட்டு வேண்டிகொண்டதற்கு இணங்க, போரில் பறம்பினருக்கு வெற்றி ஏற்பட்டதால், கொற்றவைக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாகவும் குருதியாட்டு விழாவினை கொண்டாடினர். இதனை,

**“குருதியாட்டு விழா தொடங்க இருந்தது. போரின் இழப்புகளை வெற்றியின் மகிழ்வுகொண்டு மேவும் விழா இது. போர்த்தெய்வமான கொற்றவை தனது பசியாறி மகிழ்ந்திருப்பாள். அவளின் மகிழ்வை பறம்புநாட்டுப் பெண்களின் மகிழ்வாக மாற்றுவதே இத்திருவிழா”**[12]

என்ற வரிகள் விளக்குகின்றன.

குருதியாட்டு விழாவின் நிறைவே, புதினத்தின் இறுதியாகவும் அமைந்துள்ளது. சங்க இலக்கியத்தில் பாரியின் இறப்பிற்கு பின்பு, பாரி மகளிரின் கையறுநிலைகள் பாடப்பட்டுள்ளன. ஆனால் வேள்பாரி புதினத்தில் மூவேந்தர்களுடான போரில் பாரி வெற்றி பெற்ற செய்தியோடு புதினத்தின் கதை முற்றுப்பெற்றுள்ளது. போர் வெற்றி, நீலனை மீட்டல், போரின் இழப்புகள், பறம்பு காக்கப்பட்ட நிலை என பல்வேறு நிலைகளில் பறம்பினரின் மனம் திளைத்திருக்க குருதியாட்டு விழாவின் தொடக்கத்தோடு புதினத்தின் கதை நிறைவடைந்துள்ளது.

**“முழுநிலவு பொழிந்து கொண்டிருந்தது. கூட்டத்தின் ஆரவாரம் பெருகத் தொடங்கியது. பாணர்கள் எல்லோரும் இசையாலும் குரலாலும் இணையத் தொடங்கினர். பாடல் தொடங்கிய கணத்தில் பறம்பே எழுந்து ஆடத் தொடங்கியது!”**[13]

புதின ஆசிரியர் சு. வெங்கடேசன், குருதியாட்டு என இவ்விழாவை குறிப்பிட்டதற்கான விளக்கத்தை கதையினூடாக பதிவுசெய்யவில்லை. ஆனால், போரில் ஈடுபட்ட வீரர்களின் குருதியில் தோய்ந்த துணிகளை திரியாக்கி தீபங்களை ஏற்றியதாலும், கொற்றவையின் பசிக்கு குருதியால் உணவளித்ததாலும் இவ்விழா குருதியாட்டு என்ற பெயரில் புதினத்தில் குறிப்பிடப்பட்டிருக்கலாம் என அறியமுடிகிறது. மேலும், “குருதியாட்டு’ என்ற சொல்லாட்சி, தற்கால எழுத்தாளர்களில் ஒருவரான ஜெயமோகனின், ‘வெண்முரசு’ என்ற நாவலில் இடம்பெற்றிருப்பதாக, புதுச்சொற்களஞ்சியம் என்னும் தலைப்பில், முனைவர் ப. சரவணன் குறிப்பிட்டுள்ளதும்’[14] இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

## முடிவுரை:

விழாக்கள் மனித மனங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்தவல்லன. இனம், மொழி, மதம் என எவ்வித பாகுபாடுகளுமின்றி, விழாவின் பொருண்மை ஒன்றையே கருத்தில் கொண்டு பெரும்பான்மையான விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. வேள்பாரி புதினத்தில், பாரி கதைத்தலைவனாக புனையப்பட்டுள்ளதாலும், பாரியின் பறம்பு மலையில் நடைபெறும் கதைகளாகவே பெரும்பான்மையான விழாக்கள் கூறப்பட்டுள்ளதாலும், இவ்விழாக்கள் அனைத்தும் பறம்பினை சார்ந்து நடத்தப்பட்டதாகவே சூழலியலுடன் சித்திரிக்கப்பட்டுள்ளன. திருமணவிழா என்ற நிகழ்வில் மட்டுமே, பாண்டிய நாடு மற்றும் வணிகம் தொடர்பாக நடைபெறும் விழா ஒன்று புதினத்தில் இடம்பெற்றுள்ளது. திருமணவிழா, நிறைசூல் விழா, கொற்றவை கூத்து, குருதியாட்டு விழா என பறம்பினரின் தரப்பில் கொண்டாடப்படும் விழாக்கள் அனைத்தும் பெரும்கூட்டுழைப்போடு, ஒற்றுமையை வெளிப்படுத்துவனவாகவும், மக்களின் அன்புணர்ச்சி மற்றும் வீரத்தை வெளிப்படுத்துவனவாகவும் புதினத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஆனால் பாண்டிய அரசு மற்றும் வணிக தொடர்பு காரணமாக நடைபெற்ற பொற்சுவையின் திருமணவிழா என்பது மணமகளின் அகஉணர்விற்கு எவ்வித மதிப்பும் அளிக்காமல் நடத்தப்பட்டதாக புனையப்பட்டுள்ளது.

## குறிப்புகள்:

1. ச. திருஞானசம்பந்தர், (உ.ஆ), தொல்காப்பியம், பொருளதிகாரம் மூலமும் உரையும், நூற்பா: 240,
2. ச. திருஞானசம்பந்தர், (உ.ஆ), தொல்காப்பியம், பொருளதிகாரம் மூலமும் உரையும், நூற்பா: 243,
3. சு. வெங்கடேசன், வீரயுக நாயகன் வேள்பாரி (பாகம்-2), பக். 378,
4. சு. வெங்கடேசன், வீரயுக நாயகன் வேள்பாரி (பாகம்-2), பக். 237,
5. சு. வெங்கடேசன், வீரயுக நாயகன் வேள்பாரி (பாகம்-2), பக். 92,
6. பூலியூர்க் கேசிகன் (உ.ஆ), அகநானூறு மூலமும் உரையும், பா.எ. 86:13-17,
7. சு. வெங்கடேசன், வீரயுக நாயகன் வேள்பாரி (பாகம்-1), பக். 574,
8. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள், ப. 390,
9. சு. வெங்கடேசன், வீரயுக நாயகன் வேள்பாரி (பாகம்-2), பக். 402,
10. சு. வெங்கடேசன், வீரயுக நாயகன் வேள்பாரி (பாகம்-2), பக். 403,
11. சு. வெங்கடேசன், வீரயுக நாயகன் வேள்பாரி (பாகம்-1), பக். 141,
12. சு. வெங்கடேசன், வீரயுக நாயகன் வேள்பாரி (பாகம்-2), பக். 787,
13. சு. வெங்கடேசன், வீரயுக நாயகன் வேள்பாரி (பாகம்-2), பக். 798,
14. https://www.jeyamohan.in/159388/

**துணைநூற்பட்டியல்:**

1. வெங்கடேசன், சு, - வீரயுக நாயகன் வேள்பாரி (இரண்டு பாகங்கள்),
விகடன் பிரசுரம்,
757, அண்ணா சாலை,
சென்னை.
ஆறாம் பதிப்பு - ஜூன் 2021.

2. பூலியூர்க் கேசிகன், (உ..ஆ), - அகநானூறு (மூலமும் உரையும்),
சாரதா பதிப்பகம்,
ஜி-4, சாந்தி அடுக்ககம்,
3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு,
ராயப்பேட்டை,
சென்னை - 600 014.
முதற்பதிப்பு - 2016.

3. ச. திருஞானசம்பந்தம், (உ..ஆ) - தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும்,
கதிர் பதிப்பகம்,
93, தெற்கு வீதி,
திருவையாறு - 613 204.
முதற்பதிப்பு: மார்ச் 2018.